கூட்ட எண் 06 நகராட்சி அலுவலகம்,
2020 - 2021 -ம் ஆண்டு ஆரணி,
நாள் 09.09.2020

2020-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 09.09.2020-ந்தேதி புதன் கிழமை மாலை 4.00 மணியளவில் ஆரணி நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற அவசர கூட்ட நடவடிக்கைகள்.

தனி அலுவலர்

**பொருள் எண்.1**

ஆரணி நகராட்சிக்குட்பட்ட சூரிய குளம் சீரமைப்பு பணிகள் மேற்கொள்ள மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் **110-ன்** விதியின் கீழ் ரூ.**650.00** இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள அறிவிக்கப்பட்டது. மேற்காணும் பணிகள் மேற்கொள்ள விரிவான திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டு நிர்வாக அனுமதி பெறும் பொருட்டு மன்றத்தின் ஒப்புதல் பெற்று நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை-**28** அவர்களுக்கு பணிந்து அனுப்பிவைக்கப்பட்டது. தற்போது **2020-2021**ம் ஆண்டில் தமிழ்நாடு சுற்றுச்சூழல்வனத்துறை(ம) (Enviroment and Forests (EC-1) Department-**G.O.(D)N.O.116**, **Date : 03.09.2020**)- மூலமாக அரசாணை வெளியிடப்பட்டு பணிகள் மேற்கொள்ள மதிப்பீடு ரூ. **646.67** இலட்சத்தில் நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதினை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-**1.**மன்றம் பதிவு செய்யலாம். **2.**நகராட்சி பங்களிப்பாக ரூ.**3.33** இலட்சத்தில் நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (கோப்பு எண் **765/இ1/2020**)